# கோணேஸ்வரம் 400 - ஆவணங்களை எண்ணிமப்படுத்தல்

## அறிமுகமும் பின்புலமும்

நூலக நிறுவனமானது இலங்கைத் தமிழ்பேசும் சமூகங்கள் தொடர்பான எல்லா வகையான அறிவுத் தொகுதிகளையும் மரபுரிமைகளையும் ஆவணப்படுத்திப் பாதுகாத்து இலவசமாகத் திறந்த வெளியில் அனைவரும் பயன்பெறும் வகையில் கிடைக்கச்செய்யும் முக்கிய பணியை மேற்கொள்ளும் இலாப நோக்கமற்ற நிறுவனமாகும். 2005 முதல் திறந்த, கூட்டுச் செயற்பாட்டை முன்னிறுத்திச் செயற்பட்டு வரும் நூலக நிறுவனம் இலங்கைத் தமிழ் பேசும் சமூகங்கள் தொடர்பான ஒரு முதன்மையான உசாத்துணைத் திரட்டினை உருவாக்கியுள்ளது. பல்வேறு செயற்றிட்டங்கள் மூலம் ஆவணப்படுத்தற் பணிகளை முன்னெடுத்து வருகிறது.

அச்சு ஆவணங்களின் எண்ணிம வடிவங்கள் www.noolaham.org வழியாகவும் பல்லூடக ஆவணங்கள் www.noolaham.media வழியாகவும் திறந்த வெளியில் அனைவருக்கும் இலவசமாக வழங்கப்படுகின்றன. எழுத்தாவணங்களில் நூல்கள், சஞ்சிகைகள், பத்திரிகைகள், சிறுநூல்கள், மலர்கள், நினைவு மலர்கள் ஆகியனவும் பல்லூடக ஆவணங்களில் ஒளிப்படங்கள், வாய்மொழி வரலாறுகள், பல்லூடக ஆவணங்கள், ஒலிப்பதிவுகள், காணொலிகள், கையெழுத்து ஆவணங்கள், குறுங்கால ஆவணங்கள், கல்வி வளங்கள் போன்றனவும் உள்ளடங்குகின்றன. இந்த ஆவணங்கள் பல்வேறு சிறப்புச் சேகரங்களாகவும் ஆய்வுப்பொருட் சேகரங்களாகவும் தொகுக்கப்பட்டுக் காட்சிப்படுத்தப்படுகின்றன.

## செயற்றிட்ட அறிமுகம்

திருக்கோணேஸ்வரர் ஆலயம் 1624ம் ஆண்டு சித்திரை புத்தாண்டு தினம் ஒன்றில் போர்த்துக்கேயரால் அழிக்கப்பட்டு, 400 ஆவது ஆண்டை நினைவேந்தும் வகையில் இவ்வருடம் "கோணமலை 400" என்ற தொனிப்பொருளில் செயற்பாடுகளை மேற்கொள்ள திட்டமிடப்பட்டுள்ளது. இந்நிலையில் திருக்கோணேஸ்வரர் ஆலயம் தொடர்பான புதிய தகவல்களை வெளிக்கொண்டுவரும் நோக்குடன் குறிப்பாக பிரித்தானியா, போர்த்துக்கல் போன்ற நாடுகளில் உள்ள அருங்காட்சியகங்களில் காணப்படும் திருக்கோணேஸ்வரர் ஆலயம் தொடர்பான ஆவணங்களை வெளிக்கொண்டுவர செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

அத்துடன் 1952 ஆம் ஆண்டு திருக்கோணமலை பத்தாம் குறிச்சி பகுதியில் கிணறு தோண்டும் பொழுது, தற்செயலாக கோனேஸ்வரர் திருக்கோணேஸ்வரர் விக்கிரகங்கள்

கண்டெடுக்கப்பட்டது. எனினும் 1624 ஆம் ஆண்டு போர்த்துக்கேயரால் ஆலயம் அழிக்கப்படும் பொழுது, விக்கிரகங்கள் மற்றும் ஆலயம் தொடர்பான முக்கிய ஆவணங்களை மறைக்கும் செயற்பாடுகளை பக்தர்கள் மேற்கொண்டிருந்தனர். எனினும் அது தொடர்பான சரியான தேடுதல்கள் இதுவரை இடம் பெறவில்லை. இவற்றை அடிப்படையாகக் கொண்டு இவ்வருடத்தில் அவ்வாறான விடயங்களை வெளிக்கொண்டு வரும் நோக்குடன், செயற்பாடுகளை மேற்கொள்ளவும் உத்தேசிக்கப்பட்டுள்ளது.

இவற்றின் அடிப்படையில் திருக்கோணேஸ்வரர் ஆலயம் தொடர்பான ஆவணங்களை விசேடத் தொகுப்பாக்குவது தொடர்பில் நூலகம் அமைப்பானது செயற்திட்டம் ஒன்றை முன்னெடுக்க முடியும்.

## செயற்றிட்ட நோக்கம்

திருக்கோணேஸ்வரர் ஆலயம் தொடர்பில் பல்வேறுபட்ட ஆய்வில் மேற்கொள்ளப்பட்டு இருப்பினும் அவை ஒன்று சேர்க்கப்படவில்லை. அந்தக் குறையை நீக்கி விசேட சேகரமாக அமைக்கலாம். இவற்றின் அடிப்படையில் திருக்கோணேஸ்வரர் ஆலயம் தொடர்பான ஆவணங்களை விசேடத் தொகுப்பாக்குவது இச்செயற்றிட்டத்தின் முக்கிய நோக்கமாக அமையும்.

## செயற்றிட்ட அடைவுகள்

திருக்கோணேஸ்வரர் ஆலயம் தொடர்பாக வெளியிடப்பட்டுள்ள ஆவணங்கள் மற்றும் ஆலயம் தொடர்பாக நடைபெற்றுள்ள நிகழ்வுகள் அதனது வரலாற்று முக்கியத்துவம் ஆகியவற்றை தொகுத்து அவற்றை ஆவணப்படுத்தி பாதுகாத்தல்.

## செயற்றிட்ட காலவரையறை

இச் செயற்றிட்டமானது ஒரு வருட காலப்பகுதியைக் கொண்டுள்ளது. இக்காலப்பகுதிக்குள் ஆலயம் தொடர்பான வரலாறு, அதனடிப்படையில் வெளியிடப்பட்ட ஆவணங்கள் என்பவை ஆவணப்படுத்தப்பட்டு இச்செயற்றிட்டத்தின் நோக்கம் பூரணப்படுத்தப்படும்

## எதிர்பாக்கப்படும் செலவீனம்
**LKR 4,657,574**

மேலதிக விபரங்களுக்கு
**https://docs.google.com/spreadsheets/d/1AKawT6TUJngsNqaIigpdR5Gm4PiZ6FnAWUw4YVRSM8A/edit#gid=1017615132**